| | | |
|---|---|---|
| ரோயல் கல்லூரி –கொழும்பு 07<br>Royal College – Colombo 07 | | |
| மூன்றாம் தவணைப் பரீட்சை-2022(2023)<br>**Third Term Examination-2022(2023)** | | 48 \| T \| I,II |
| தமிழ் இலக்கிய நயம்<br>Tamil Literature | தரம் 11<br>Grade 11 | நேரம் 3 மணித்தியாலங்கள்<br>Time 3 Hours |

**அறிவுறுத்தல்:-**

- **வினாத்தாள் I இல் உள்ள இரண்டு வினாக்களுக்கும் இவ் வினாத்தாளிலேயே விடை எழுதுக.**

## பகுதி I

1) (i) தொடக்கம் (v) வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.

I. “ சுனைப்பூக் குற்றுத் தொடலை தைஇப்
புனக்கிளி கடியும் பூங்கட் பேதை ………..”

அ) இப் பாடலடி இடம் பெற்றுள்ள நூல், அதன் ஆசிரியர் என்பவற்றைத் தருக.

……………………………………………………………………………………

ஆ) புனக்கிளி கடியும் பூங்கட் பேதை என்பதன் பொருளைத் தருக.

……………………………………………………………………………………

II. “ ஒன்றென்ன? இரண்டையுமே எடுத்துச் செல்லுங்கள். உங்களுக்கு இல்லாததா?”

அ) இக் கூற்று யாரால் , யாருக்குக் கூறப்பட்டது?

……………………………………………………………………………………..

ஆ) இரண்டையும் என குறிப்பிடப்படுவது யாது?

……………………………………………………………………………………

III. “மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணிப்பூ வாடை அது போர்த்துக் கருங்கயல் விழித்தொல்கி நடந்தாய் வாழி ………”

அ) இப் பாடலடி இடம் பெற்றுள்ள இலக்கியம் எது?

……………………………………………………………………………………

ஆ) இங்கு கையாளப்பட்டுள்ள அணியைக் குறிப்பிட்டு விளக்குக.

……………………………………………………………………………………



kalvi.lk

IV. “ஏர்குலாம் முகத்தினாளை இறைமுகம் எடுத்து நோக்கி தார்குலாம் அலங்கல் மார்பன் …………………..”

அ) இங்கு ஏர்குலாம் முகத்தினாள் எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

……………………………………………………………………………………

ஆ) தார்குலாம் அலங்கல் மார்பன் என்பதன் பொருள் யாது?

……………………………………………………………………………………

V. “ஏய்” என்று என்னைப் பிடிக்கும்-மனம் , எப்படிக் கண்ணே பாடம் படிக்கும் -

அ) இப்பாடலடி இடம் பெற்றுள்ள கவிதையின் ஆசிரியர் யார்?

……………………………………………………………………………………..

ஆ) இப்பாடல் வரிகளில் வெளிப்படும் உணர்ச்சி யாது?

……………………………………………………………………………………

( 5X4= 20 புள்ளிகள்)

2) கீழ்க் காணும் செய்யுட் பகுதியை அல்லது உரைநடைப் பகுதியை வாசித்து , தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

வயிற்றில் குடியிருந்து
வாழ்ந்து பசிக்கிறது
நிகழ்காலம்
பசியில் அடைத்த
காதிலும் விழுகிறது
“நாளை புரட்சி”
சரித்திரம் நமது கட்சி
என்றென
பசியைக் கூட
ஜீரணிக்க முயற்சிக்கும்
ஏப்பக் குரல்கள்
ஆனால்
நாளைகள் ஒவ்வொன்றும்
நாள்தோறும் நேற்றாக
தன் பாட்டில் போகிறது
தான் தோன்றிச் சரித்திரம்

I. இக் கவிதையின் ஆசிரியர் பெயர் , பிறந்த இடம் என்பவற்றைத் தருக.

……………………………………………………………………………………



Education கல்வி
kalvi.lk

( 4 புள்ளிகள்)

I. இக் கவிதை எழுந்த பின்னணி யாது?

……………………………………………………………………………………….

………………………………………………………………………………………..
( 4 புள்ளிகள்)

II. புரட்சி பற்றிய கவிஞரின் நோக்கு யாது?

……………………………………………………………………………………….

………………………………………………………………………………………

……………………………………………………………………………………….
( 6 புள்ளிகள்)

III. இக் கவிதை வெளிப்படுத்தும் செய்தி பற்றிய உமது கருத்துக்களைத் தருக.

………………………………………………………………………………………

……………………………………………………………………………………….

………………………………………………………………………………………
( 6 புள்ளிகள்)

Education கல்வி

**அல்லது**

புகழ் வேட்டையாடப் பிறருடைய நிலத்தைப் பற்றிக் கவலை கொள்ளாமல் போரிடுதலை ஒரு வாய்ப்பாகக் கொண்டனர் அற்றை நாள் தமிழர். எவ்வளவு பெரிய அரசனும் இதற்கு விலக்காமாறு இல்லை. மேலும் ஓரிரண்டு போர்களில் வெற்றி கண்டு விட்டால் அது குடிப்பழக்கம் போல் ஆகிவிடும். அவ் வெற்றி தந்த வெறி மேலும் மேலும் போர் செய்யத் தூண்டும். நாம் இவ்வாறு போர்செய்து அதனால் பெறுவதாக் கருதிய புகழ் உண்மையானதா? என்று ஆராய அவர்கள் முற்படவில்லை.

அரசராகத் தாம் பிறப்பதே போர் செய்யத்தான் என்று கூடப் பலர் கருதி விட்டனர். இத்தகைய ஒரு நிலையில் அறிவுடைப் பெருமக்கள் சிலர் மனத்திலாதல் ஓர் ஐயம் தோன்றி இருத்தல் வேண்டும். கேவலம் போரிடுதல் ஒன்றுதானா புகழை வளர்க்கும்.? இது தவிர இவ்வரசர் பெருமக்கள் செய்யத்தக்க நற்செயல்கள் வேறு இல்லையா? இவ்வாறு சிலர் தம்மைத் தாமே கேட்டுக் கொண்டு பெற்ற விடைகளும் புறப்பாடல் முதலியவற்றில் காணக்கிடைக்கின்றன. 'மாங்குடி மருதனார்'என்ற புலவர் தம்முடைய அரசனுக்குண்டான போர் வெறியைத் தணிக்க 'மதுரைக் காஞ்சி' என்றொரு நூலையே(அவ்வளவு பெரிய நூல் அது) இயற்றினார் என்றால் பழந்தமிழர் போர்வெறி என்ற பாலைவனத்தில் இது ஒரு நீர் ஊற்றுப் போன்று காணப்படுகிறது.

I. இப்பந்தியில் கூறப்பட்ட நூலொன்றையும் அதன் ஆசிரியரையும் தருக.

………………………………………………………………………………
(4 புள்ளிகள்)



kalvi.lk

II. அற்றை நாள் தமிழரின் இயல்பு யாது?

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………

( 4 புள்ளிகள்)

III. போர் செய்தலுக்குக் கூறப்படும் உவமையை எடுத்துக் காட்டி விளக்குக.

…………………………………………………………………………………

…………………………………………………………………………………..

…………………………………………………………………………………..

( 6 புள்ளிகள்)

IV. போர் வெறியைத் தணித்தல் பற்றி இப் பந்தியில் கூறப்பட்டவை யாவை?

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………..

( 6 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

பகுதி II

- 1 ம் வினாவுக்கும் ஏனைய 2,3,4,5 ஆகிய வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்குமாக மொத்தம் மூன்று வினாக்களுக்கு விடையளிக்குக.

1) பின்வரும் கவிதைப் பகுதியை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வழிகாட்டற் குறிப்புகளின் அடிப்படையில் கவிதையை நயந்து குறைந்த பட்சம் 200 சொற்களில் எழுதுக.

"அனை ' எதிர்ந்து இவன் ஆய்வளையாரோடும்
மனையின் வாயில் வழியினை மாற்றினால்,
நினையும் வீரன் அந் நீள் நெறி நோக்கலான்;
வினையம் ஈது என்று , அனுமன் விளம்பினான்

" நீரெல்லாம் அயல் நீங்குமின் நேர்ந்து, யான்
வீரன் உள்ளம் வினவுவல்" என்றலும்,
பேர நின்றனர் யாவரும் பேர்கலாத்
தாரை சென்றனள் தாழ்குழலாரொடும்

உரைசெய் வானரவீரர் உவந்து உறை
அரசர் வீதி கடந்து அகன் கோயிலைப்
புரசையானை அன்னான் புகலோடும் , அவ்
விரைசெய் வார்குழல் தாரை , விலக்கினாள்.



kalvi.lk

விலங்கி மெல்லியல், வெள்நகை, வெள்வளை
இலங்கு நுண்ணிடை ஏந்து இள மென்முலை,
குலம் கொள் தோகை மகளிர் குழாத்தினால்,
வலம் கொள் வீரன் வருவழி மாற்றினான்.

வில்லும் வாளும் அணிதொறும் மின்னிட
மெல் அரிக்குரல் மேகலை ஆர்த்து எழ,
பல்வகைப் புருவக்கொடி பம்பிட
வல்லி ஆயம் வலத்தினில் வந்ததே.

அ) இப்பாடல்கள் எழுந்த பின்னணி
ஆ) அனுமனின் ஆலோசனை
இ) தாரையின் உபாயம்
ஈ) வானரப் பெண்களின் தோற்றம்
உ) அணிப்பயன்பாடு

( 6X5= 30 புள்ளிகள்)

2) **தீவு மனிதன்** என்ற சிறுகதையிலே

அ) கதைசொல்லியின் தனிமை வெளிப்படும் விதம்
ஆ) கதைசொல்லி மகிழ்ந்திருந்த சந்தர்ப்பங்கள்
என்பவற்றை எடுத்துக் காட்டி விளக்குக.

( 15 புள்ளிகள்)

3) **கானல்வரி** என்ற பகுதியில்
அ) காவேரி நதியின் வளம்
ஆ) சோழ மன்னனின் பெருமைகள்
என்பவற்றை விபரிக்குக.

( 15 புள்ளிகள்)

4) **பத்தி எழுத்துக்கள்** எனும் கட்டுரையில்

அ) மரம் என்பது உயர்திணை
ஆ) மென்மையே வாழும்
என்பவற்றை விளக்க கட்டுரை ஆசிரியர் கையாண்ட உத்திகளை எடுத்துக்காட்டுக.

( 15 புள்ளிகள்)

5) **‘புதுமைப் பெண்ணாய் மாறிடுவோம்’** எனும் கவிதையிலே

அ) மலையகத் தொழிலாளிப் பெண்களின் துன்பநிலை
ஆ) அவர்களுடைய விடுதலை வேட்கை
ஆகியன சித்திரிக்கப்பட்டிருக்குமாற்றினைத் தெளிவு படுத்துக.

( 15 புள்ளிகள்)



kalvi.lk

kalvi.lk